

குன்றத்தூரில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார். இதில் கழகப் பொருளாளரும், மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வபெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், க.செல்வம் எம்.பி., மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 9–இல் சோழவந்தான், மதுரை வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 13.09.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | சோழவந்தான் | ஜான்சி மஹால், வாடிப்பட்டி. |
| 14.09.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | மதுரை வடக்கு | ட்வின் மஹால், அண்ணாநகர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10-09-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


'திராவிட மாடல்' ஆட்சியின் நாயகர்

# முதல்வர் மு.க.ஸ்டாலினை உச்சிமோந்து தாய்க் கழகம் வரவேற்கிறது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.10-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சமூகநீதிக்கான சரித்திர நாயகராம் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை 2021இல் தொடங்கினார். அமெரிக்கா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் நாடுகளுக்குச் சென்று வந்தார். எடுத்த எடுப்பிலேயே ரூ.18,498 கோடி மதிப்பிலான தொழில் முதலீடுகளைக் கொண்டு வந்தார். 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளுக்கு வழி செய்தார்.

அடுத்த கட்ட பயணமாக கடந்த ஆகஸ்ட் 30ஆம் தேதி புறப்பட்டு ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு இன்று விடியற்காலை 3 மணிக்கு வந்தடைந்தார். முதலீடுகளை மட்டுமல்ல; அங்கு வாழும் தமிழர் குடும்பங்களின் விலை மதிக்கவே முடியாத அன்பையும் திரட்டி வந்தார். முதலீட்டாளர்களின் நன்னம்பிக்கையையும் ஈட்டி வந்தார்.

ஜெர்மனி பயணத்தை வெற்றிகரமாக முடித்து இலண்டன் சென்றார். அங்கு நான்கு நாட்கள் முழுமையாக தங்கினார்.

இந்த ஒரு வார பயணத்தில் ரூ.15516 கோடி முதலீடுகளை ஈர்த்துள்ளார். 17613 பேருக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாடு - இந்தியாவில் பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இந்த வேகத்தில் சென்றால் முதலிடத்தில் தமிழ்நாடு மிளிரும் என்பதில் அய்யமில்லை.

இந்தச் சுற்றுப் பயணத்தில் உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் நெஞ்சில் சிலிர்ப்பூட்டும் வரலாற்றுச் சிறப்பான நிகழ்ச்சி என்பது - லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் படத்தினை தந்தை பெரியாரின் பேரன் என்று தன்னைப் பெருமையாகக் கூறிக் கொள்ளும் நமது திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உலகப் புகழ் பெற்ற பல்கலைக் கழக அரங்கில் திறந்து வைத்து, மகிழ்ச்சிக் கடலில் மிதந்தார்!

வரலாற்றில் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்று புளகாங்கிதம் அடைந்தார்.



தந்தை பெரியாரின் சிந்தனைகள் உலகளாவிய சமூக மாற்றத்திற்கு வழிகாட்டுபவை என்பதை ஏற்ற இறக்கத்துடன் எழுச்சியுரை ஆற்றினார்.

உலகமயமாகிறார் பெரியார் என்று நாம் தொடர்ந்து கூறி வந்ததை, தமக்கே உரித்தான அழுத்தமான ஆணித்தரமான சொற்களால் ஓங்கி ஒலிக்கப்பட்ட உரை அது!

அறியாமை புதைக்கப்பட்டு சுயமரியாதை விதைக்கப்பட்டு கொள்கை முதலீடுகளை செய்து வந்திருக்கிறார்.

அதற்காக முதல்வருக்கு நமது தனித்த பாராட்டுகள்.

மண்டைச் சுரப்பை உலகு தொழும் என்றாரே தந்தை பெரியாரைப்பற்றி புரட்சிக் கவிஞர்.

அந்தப் பாடல் வரிகள் தான் நம் நெஞ்சங்களில் எல்லாம் அலையடித்து பாய்ந்தன.

கார்ல் மார்க்ஸ் நினைவிடம், அண்ணல் அம்பேத்கர் தங்கிப் படித்த இடங்களைப் பார்த்தது - அவரது சிந்தனை ஓட்டம் எத்தகையது என்பதற்கான அடையாளமாகும்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து வந்தார் என்பது ஒரு பக்கம், தமிழ்நாட்டின் தனிப் பெரும் உயர் சிந்தனையாளரான தந்தை பெரியாரின் சீலங்களை உலகம் உணரும் வண்ணம் அதுவும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உலகே திருப்பிப் பார்க்கும் வகையில் முரசொலித்து திரும்பும் அருமைச் சகோதரர் நமது மானமிகு மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை உச்சி மோந்து ஆரத் தழுவி உளம் பூர்வமாகத் தாய்க் கழகமாம் திராவிடர் கழகம் வரவேற்கிறது - வாழ்த்துகிறது!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## இசை அரசனுக்கு மட்டுமல்ல –

# இசை ரசிகர்களுக்குமான பாராட்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை,செப்.11-

சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் 13.9.2025 அன்று மாலை திரையுலகில் பொன் விழா காணும் சிம்பொனி சிகரம் தொட்ட இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டு விழா நடைபெறவிருப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**"ராஜாவைத் தாலாட்டும் தென்றல்" – நம் பாராட்டு விழா!**

**இது இசையின் அரசனுக்கு மட்டு-மல்ல; அவரை வியக்கும் உலகில் உள்ள அத்தனை இசை இரசிகர்களுக்குமான பாராட்டு விழா!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. – மேயர் பிரியா பங்கேற்பு!

# திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## அமைச்சர்– மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர் பாபு பயனாளிகளுக்கு உரிய ஆவணம் வழங்கினார்!



சென்னை,செப்.11-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாக "உங்களுடன் ஸ்டாலின்" என்ற புதிய திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால்

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் /திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று திரு வி க நகர் சட்டமன்றத் தொகுதியில் மண்டலம் 6 வார்டு-74 சென்னை, கிருஷ்ணர் தாஸ் சாலையில் உள்ள மாநகராட்சி பள்ளியில்

நேற்று (10.09.2025) புதன்கிழமை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக

மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம். 18 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 80 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 50 பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 10 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணபப்ங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 4 மனுக்கள் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை 17 மற்றும் பெயர் மாற்றுதல் பெறப்பட்டு அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 126 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -2 விண்ணப்பம்

பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -364 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -150

என மொத்தமாக 1013 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1006 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன்,சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், பகுதி துணைச் செயலாளர் பெரம்பூர் ஆர் ராஜன் மண்டல அலுவலர் சரவணன் வட்ட கழகச் செயலாளர் எஸ் புஷ்பராஜ் ஜி கிருஷ்ணகுமார்

மற்றும் வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 203 வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,செப்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 203 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (10.09.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 93 முகப்பேர் கிழக்கு, பஜார் சாலை, (முகப்பேர் தீயணைப்பு நிலையம் அருகில்). 2) வட்டம் 89, கழக கட்சி அலுவலகம், டிவிஎஸ் காலனி பிரதான சாலை, சென்னை பப்ளிக் ஸ்கூல் அருகில். சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி. வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/ வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி. ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.09.2025) சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பாக, எச்ஐவி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பிரச்சாரம் 2025 தொடங்கி வைத்து, மாநில மற்றும் மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையே நடைபெற்ற வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ்குமார், அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார். திட்ட இயக்குநர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி. பொது சுகாதாரத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம். மருத்துவக்கல்வி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன் மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரி முதல்வர்கள். கல்லூரி – பள்ளி மாணவர்கள் உடனிருந்தனர்.





இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (10.09.2025) சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் ரிப்பன் கட்டட வளாகத்தில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு வரும் விக்டோரியா பொது அரங்கத்தின் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.